நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்:
முன்னிலை: திரு.சி.சுப்ரமணியன், டி.சி.இ.,

ந.க.எண். 2718/2017/வேம3 நாள்:16.04.2018

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம், 2017 – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், வேலூர் மண்டலம் – 2.62 ஏக்கர் ( 10603.00 ச.மீ. ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3). நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational guidelines, Roc. No.13193/2017/LA2, நாள்.30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. மனுதார் திரு. A. கமல்சந்த் அவர்களின் கடிதம் நாள். 09.12.2017. |

----

**உத்திரவு:**

பார்வை (1 ) மற்றும் (2) –ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், அத்தியந்தல் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள் : 67/1–ல் 2.62 ஏக்கர் ( 10603.00 ச.மீ. ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி ம. வ. / ந. ஊ. து. இ. (வே.ம.) வரன்முறைப்படுத்துதல் எண்: 552 (R) / 2018 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவுன் மொத்த பரப்பு | : 10603.00 ச.மீ. (அ) 114130.00 ச.அடி<br>(அ) 2.62 ஏக்கர் |
| மனைப்பிரிவில் அமைந்துள்ள மொத்த மனைகளின் எண்ணிக்கை | : 66 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 49 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : 1–11. 16–20. 25–39. 41. 43. 45. 47. 50–56. 59–64 |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : 68661.00 ச.அடி |

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 17

விற்கப்படாத மனைகளின் எண்கள் : 12–15, 22, 24, 40, 42, 44, 46, 48, 49, 57, 58, 65, 66

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 25078.00 ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 2847.00 ச.அடி - 10.19%

( மனை எண்கள். 21, 23 பூங்காவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது )

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:**

1) **பரிசீலனைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதள வாயிலாக மனை ஒன்றிக்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION No : DTCP/P/0024091/2017 Dt. 03.11.2017 –ன் படி விற்கப்படாத மனை எண். 22–க்கான கூராய்வு கட்டணம் ரூ.500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. ONLINE REGISTRATION No : DTCP/L/0024232/2017 Dt. 03.11.2017 –ன் படி விற்கப்படாத 16 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் தலா ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ. 8,000/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

2) **வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் ( ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம் (ரூபாயில் ) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம் (ரூபாயில் ) |
|---|---|---|---|
| விற்கப்பட்ட மற்றும் விற்கப்படாத மனைகளின் பரப்பு குறித்த விவரம் மற்றும் அதற்குரிய வளர்ச்சிக் கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்துவது குறித்த விவரம் தனித்தாளில் தயாரிக்கப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | | | |

மேற்கான் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு**

| | |
|---|---|
| " 0217,Urban Development -60 Other Urban Development Scheme-800 .Other receipts AT Receipts under Regularization charges of Unapproved Layout and Plots –DTCP (DPC 0217 60800 AT 0007) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண். ----------------

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1) அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017-ல் விதி எண்.7 (g) (ii) -ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஒம். 16/4

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

16/4/2019

இணைப்பு:

1. மனைப்பிரிவு வரைபடம் - 2.
2. வளர்ச்சிக் கட்டணம், வரன்முறைப்படுத்துதல் கட்டண விவர பட்டியல்.

(11)

பெறுநர்:
தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

நகல்:

| | |
|---|---|
| 1. மனுதாரர், திரு. A. கமல்சந்த், எண். 402/105, தேரடி வீதி, திருவண்ணாமலை. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |
| 2. உதவி இயக்குநர், நில அளவை (ம) பதிவேடுகள் துறை, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவண்ணாமலை மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3. வட்டாட்சியர், திருவண்ணாமலை வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 4. சார்பதிவாளர், திருவண்ணாமலை பதிவு மாவட்டம், திருவண்ணாமலை சார்பதிவாளர் – II அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம். | சாலை (ம) பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 5. நகர் ஊரமைப்பு ஆணையர், 807, அண்ணா சாலை, சென்னை – 2. | (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது) |

6. கோப்பு

7. வைப்பறை

**திருவண்ணாமலை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) அவர்களின் செயல்முறைகள்**

முன்னிலை : **திரு. அ. கருணாகரன்**

ந.க. எண்.ஊ.அ3/1387/2018 நாள் - .07.2018

பொருள் : மனைபபிரிவு அங்கீகாரம் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் - அத்தியந்தல் ஊராட்சி-ச எண். 67/1 -ல் 2.62 ஏக்கர் பரப்பில் அனுமதியற்ற மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றது மனைப்பிரிவு அங்கீகரித்து உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை : 1. நகர ஊரமைபபு துணை இயக்குநர்(பொ), வேலூர் மண்டலம் அவர்களின் ந.க.எண் 2718/2017/வேம3 நாள் 16.04.2018.

2. ஊராட்சிமன்ற தீர்மானம் எண் 10 நாள் 15.06.2018

3. அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் 04.05.2017.

~~~~~

உத்தரவு:-

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், அத்தியந்தல் ஊராட்சி, சர்வே எண் 67/1 -ல் 2.62 ஏக்கர் பரப்பில் சுபிக்ஷா நகர்-I என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான ஒப்புதல் பார்வை 1-ல் காணும் செயல்முறைகளில் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் அத்தியந்தல் ஊராட்சிமன்ற தீர்மானம் எண் நாள் .2018-ன்படியும் மற்றும் விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு (எண். 12-15,22,24,40,42,44,46,48,49,57,58,65,66) உரிய வரன்முறைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஊராட்சியில் செலுத்தப்பட்டதன் அடிப்படையிலும் சர்வே எண் 67/1 -ல் 2.62 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பெற்ற சுபிக்ஷா நகர்-I மனைப்பிரிவினை வரைமுறைப்படுத்தி இதன்மூலம் உத்தரவிடபபடுகிறது.

இணைப்பு : நகர ஊரமைப்பு துணை இயக்குநா
வேலூர் அவர்களின் கடித நகல்

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.)
திருவண்ணாமலை.

பெறுநர்
திரு.எ.கமலசந்த
402/105, தேரடி வீதி
திருவண்ணாமலை.

நகல் : நகர ஊரமைப்பு துணை இயக்குநா, 239, பேஸ்-2, சத்துவாச்சாரி, வேலூர் மண்டலம் அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருவண்ணாமலை அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : இணை சார்பதிவாளர்-2, திருவண்ணாமலை.

நகல் : ஊராட்சி செயலர், அத்தியந்தல் ஊராட்சி.

நகல் : கோப்பு.
~~~~~